
www.padippakam.com



# தணலில்நின்று . . .

## கவிஞர் அருண்

படிப்பகம்

www.padippakam.com

# துணைவிழ்நின்று.

அரும்பு வெளியீடு : 1
அருண் கவிதைகள்

வெளியீடு :

S . Sivagnanam
Axelborg 7B , 2th
8700 Horsens
Denmark.

அரும்பு
அரும்பு வெளியீட்டகம்
கட்டுவன்

படிப்பகம்

www.padippakam.com

# சமர்ப்பணம்

பாலனாய் இருந்தபோதும்
பள்ளி நான் சென்ற போதும்
கோலமார் வீதி எங்கும் ।
கோடையில் அலைந்த போதும்
பாலர்களோடு சேர்ந்து
குறும்புகள் செய்த போதும் ।
சாலவே என்னைக் காத்து
சராசரி மனித வாழ்வின் ।
பக்குவம் தெரிய என்னைப்
பள்ளிக்கு அனுப்பிவைத்து ।
எனக் கொரு வாழ்வு தந்த
என் உயிர் தாய் தந்தைக்கும் ।
எங்களின் மண்ணைக் காக்க
தமிழரின் வாழ்வைக் காக்க ।
இன்னுயிர் தந்த எங்கள்
தாயக நண்பர் கட்கும் ।
இத்தமிழ் நூலை நானும்
சமர்ப்பணமாக வைத்தேன் ।

கவிஞர் அருண்.



படிப்பகம்

# புகுமுன்

அன்புள்ளம் கொண்டோரே
என் கவிதையின்
மூன்றாவது தொகுப்பு இது !
முன் இரண்டு கவிதை களும்
என் தாயகத்தில்
வெளியிடப் பட்டவை !
நாம் வாழும்
இன் நாட்டில் முதன் முதலாக
இக் கவிதை நூலை
வெளியிடுகிறேன் !
இதனை என்
கலைத்தாயின் வாழ்த்தோடு
உங்கள் பொற்
கரங்களில் ஒப்படைக்கிறேன் !
இதனைப் பெற்று
நல்ஆதரவு தருமாறு
வேண்டுகிறேன் !

என்றும் உங்கள்
அருண்.

www.padippakam.com

# காசி ஆனந்தன் தரும் வாழ்த்து

தமிழ் மானம்
காப்பவர்
சிவஞானம்
கட்டுவன் வளமாரி !
தந்த
செந்தமிழ்
வீரர் !
அவர் பேனா
கொட்டும் தமிழ்மாரி
குளிர்மாரி யல்ல !
சிங்கள ஏகாதிபத்தியத்தை
சுட்டு நீறாக்கும்
சொல்மாரி !
தழல் மாரி
மதவேழம் என்னும்
மறவர்களை
உருவாக்கி !
தமிழ் ஈழம் படைப்பது
அவர் நோக்கம்
விடுதலை ஒன்றே
அந்த வீரர் !
நெஞ்சின் ஏக்கம்
நிமிர் தமிழா !
என முழங்கும்
தமிழ்த் தொண்டன்
வெடிக்கும்
எரிமலை !





படிப்பகம்

www.padippakam.com

என்
அன்புத்தம்பி
பிடித்துள்ள
எழுது கோல் !
என்றோ
ஒரு நாள்
வழங்கும் நம் கையில்
செங்கோல் !
பாராளும் தமிழர்
கொடி !
நாடாளும் தமிழர்
குடி !

கவிஞர் காசி.

## வாழ்த்து

கவிதை உலகத்தில்
கற்பை நிலை நாட்டும் !
கவிஞன் சிவஞானம்
காணும் கன வெல்லாம் !
புவியில் உருவாகி
புலனில் வெறி யேறி !
கவியில் உணர் வாகி
காணும் தமிழ் நாடே !

தரு. சண்முகநாதன்.



படிப்பகம்



தணலில்நின்று

என்ற கவிதை நூல் இலங்கைத் தமிழர்களின் உணர்வு பூர்வமான இப்படைப்பு சிறப்பாக வெளிவர எமது மனப்பூர்வமான.

நல்லாசிகள்

# மெக்டாற் எலெக்ரோனிக்

உங்கள் வீட்டு ரீவி, வீடியோ, ரேப்றெக்கோடர் மற்றும் ஏனைய எலெக்ரோனிக் சாமான்கள் பழுதடைந்து விட்டனவா ?

இவற்றை குறைந்த விலையில் திருத்திக்கொள்ள விரும்புகிறீர்களா ?

பிற்பகல் **5** மணிக்குப்பின்னர் !

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் **40 57 60 94 ( MEHRDAD )**
திருத்த வேலைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்படும்.

## வாழ்த்து

என்னரும் வினாயகர்
  இரங்கு வாரெனில் !
முன் நிலவுலகதன்
  இயல்பை என்னவர் !
சொன்ன நன் நெறியினில்
  சால்பு காத்திட !
என் உயர் சிந்தனை
  புலர்தல் திண்ணமே !

## எடுப்பு

வண்ணக் கலையும்
  வளம் சேர் மொழியும் !
பண்ணும் இசையும்
  பரதக் கலையும் !
எண்ணத் தோடு
  ஏற்றம் பெறவும் !
கண்ணாய் விளங்கும்
  கலை மிகு நாடே !

www.padippakam.com

# எங்கள் தாயகம்

அன்னைத் தமிழும்
அமைதிக் கொடியும் !
விண்ணைத் தொடுநாள்
விரைவில் வருமே !
பண்டைத் தமிழர்
பண்பாட்டுடனே !
கண்ணால் காண
விரைவில் வருமே !

விண்ணும் மண்ணும்
துகள் படஎன்றும் !
விடுதலை நாளும்
விரைவில் வருமே !
இன்பம் பொங்கும்
இனிய நாளும் !
இனிதாய் எங்கள்
வாழ்வில் வருமே !





படிப்பகம்

எங்கள் தாயகம்
ஈழத் தமிழகம் ।
பங்கம் நீங்கிட
விடுதலை தருமே ।
வங்கக் கடலும்
பொங்கும் நுரையில் ।
எங்கள் தாயகக்
கதை பல சொல்லுமே ।

சுதந்திர கீதம்
ஒலித்திடும் நாட்டில் ।
விதம் விதமான
வழியினைக் காட்டி ।
இதயத்தோடு
ஊறிய உணர்வு ।
எங்கள் தாயக
விடுதலை தருமே ।

www.padippakam.com

மறவர் படைதான்
    தமிழர் படையே !
வீறல் மிகு வீரர்
    வாழும் படையே !
திறமுடன் இன்றைய
    இளைஞன் எழுத்து !
திகைத்திட எங்கள்
    விடுதலைப் போரில் !

செங்களம் ஆடும்
    செந்தமிழ் வீரர் !
மங்காப் புகழுடன்
    மானம் காத்தார் !
சிங்கள வெறியரின்
    சித்தம் கலங்கிட !
சங் கொலி முழங்கி
    சாதனை செய்தார் !





படிப்பகம்

பெரிய நூலகம்
தீக்கிரை யானதும் ।
அரிய தாயகம்
அமைதி இழந்தது ।
கொடிய சிறையினில்
தாயக மக்களை ।
கொல்லும் நிலையினைப்
பார்த்து இருந்ததும் ।

தாயக மண்ணில்
தமிழர் வாழ்வு ।
தாழ்வாய்ப் போனதும்
அகதிகள் ஆனதும் ।
சொந்தமண்ணில்
வாழ்வை இழந்து ।
சோகம் நிறைந்து
தொடர்கதை ஆனதும் ।

குன்றம் சூழ்ந்த
திருமலை யூரும் !
மீன் மகள் பாடும்
மட்டக் களப்பும் !
எங்கள் தாயக
மண்ணில் பிரிந்து !
வடக்கைத் தனியே
ஆக்கும் முயற்சியும் !

தூரப் பறக்கும்
விமானக் குண்டும் !
துரத்திக் கொல்லும்
ஏவுகணைகளும் !
இமயத்துக்கு
நிகராய் நிற்கும் !
எங்கள் தாயக
வெற்றியைத் தருமே !





படிப்பகம்

www.padippakam.com

# உணர்வு

தமிழ் மானம்
காப்பவர்
தமிழர் அவர்
தாயகம்
மீட்பதில்
வீரர் !
நெஞ்சினில்
விடுதலைச்
சுடரைத் தினம்
ஏந்திநடப்பதில்
சூரர் !
கொடுமையை
எதிர்த்திடும்
தோழர்
கொண்ட
கொள்கையில்
மாறாத்
தீரர் !
விடுதலை
ஒன்றே
மூச்சு



படிப்பகம்

www.padippakam.com

எங்கள்
   சுதந்திரம் தான்
அதில் பேச்சு !
   எதிரிக்கு
இடியென
   நாளும்
எங்கள்
   தாயக விடுதலைப்
போரினைத்
   தந்தார் !
வெடிக்கின்ற
   எரிமலைத்
தோழர்
   எங்கள்
தேன்தமிழ்
   ஈழத்து
செந்தமிழ்
   வீரர் !
எதிரியை
   வீரட்டிய
தோழர்
   எங்கள்
தாயகத்துக்
   கொரு
வெற்றியின்
   சூரர் !





படிப்பகம்

www.padippakam.com

தாயக
விடுதலை
ஒன்றே
எங்கள்
தாரக மந்திரம்
என்பதை
உணர்க !

## கவி வெடி (திருப்புகழ் சந்தம்)

பட பட வென ஒரு
கவி வெடி கொடியவர்
தலையினிலே இனி
வெடியாதோ !
அடி புயல் இடை நிலை
கெடுமொரு புவி யென
விடுதலை நாளும்
வாராதோ !
விடு விடு என்றே
தமிழரின் நாடு
தனி யொரு நாடாய்
ஆகாதோ !





படிப்பகம்

www.padippakam.com

அலை கடல் எழுந்து
தரையினில் பரந்து
தமிழரின் தாயகம்
மீழாதோ !
கொடியவர் உடலும்
சகதியில் பிளந்து
தமிழரின் கொடியும்
ஏறாதோ !
தூங்கிடும்
தமிழர்
தூக்கம்
கலைந்து
சுதந்திர போரிகை
முழங்காரோ !
ஈழகம்
பிழவுற
தாயகம்
மலர் வுற
தமிழரின்
சுதந்திரம்
மீளாதோ !





படிப்பகம்

www.padippakam.com


# தங்காஸ்

தரத்தினில் சிறந்த பொருட்களைத் தருவது
தங்காஸ் !

மரபினை ஒத்த உடு புடவைக்கும் மரக்கறி வகைக்கும்
தங்காஸ் !

நிறைவாய் பெற்று மகிழ்வாய் வாழ சிறந்த இடமே
தங்காஸ் !

விதம் விதமான மீன் வகை எல்லாம் கிடைக்கு மிடமே
தங்காஸ் !

குறைந்தவிலையில் நிறைந்த பெருட்களைப் பெற்றுக் கொள்ள
தங்காஸ் !

நம்பிக்கையோடு வாருங்கள் !
நிறைவோடு திரும்புங்கள் !!

T. R . T . THANGAS
Vestegade 25 , 7400 Herning, Danmark.
Tlf : 97 21 22 58




படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திரம்

தமிழரின் தாயகம்
  சுதந்திரம் பெறுமெனச்
சொல்வதும் பொய்யாமோ ।
  தமிழரின் மண்ணை
இராணுவ வெறியரின்
  கால்பட விடுவோமோ ।
யுத்தம் எழுந்து
  கொடும் பகையாகி
இரத்தம் பாய்ந்தாலும் ।
  எங்கள் வெற்றியின்
உறுதி சத்தியம் என்பதை
  உலகினில் சொல்வோமே ।
அமைதியை வேண்டி
  பல பல ஆண்டாய்
அரசுடன் கதைத்தோமே - இந்த
  சிங்கள பௌத்த
பிக்குகள் எழுந்து
  சிதைவுறச் செய்தாரே
தமிழரைச் சிதைத்திட
  நினைத்தாரே - அவர்





படிப்பகம்

www.padippakam.com

சிந்தை கலங்கிட
தாயக மக்களைக்
காத்திட வந்தோமே – நாம்
களத்தினில் வெல்வோமே !
ஆச்சியும் அப்புவும்
பாடி மகிழ்ந்ததும் !
ஆயிரம் ஆயிரம்
கலைஞர் பிறந்ததும் !
நாவலர் தோன்றி
நற் தமிழ் காத்ததும் !
நாடு போற்றும்
புலவர்கள் வாழ்ந்ததும் !
வீதிகள் தோறும்
விழாக்கள் எடுத்ததும் !
விந்தைகள் செய்து
ஆடி களித்ததும்
எங்கள் தாயக
மண்ணின் விடுதலை !
எண்ணிப் பார்த்திடில்
சிந்தை குளிருமே !





படிப்பகம்

# விடுதலை நாள் (காவடிச்சிந்து)

எங்கள் தாயக
　மண்ணின் விடுதலை
வெற்றிக் களிப் போடு
　நாம் பாட !

செங்களம் ஆடிய
　செந்தமிழ் வீரரின்
வெற்றித் திருமுகம்
　நாம்பாட !

எங்கள் பூமியும்
　வானமும் எங்களின்
தாயகச் சொத் தென்று
　நாம்பாட !

வல்லை வெளியினைத்
　தாண்டிய வண்டிலும்
சன்னதி சென்றதும்
　நாம் பாட !

மாங்கனி போலொரு
　குண்டு தலையினில்
வந்து விழுந்ததை
　நாம் பாட !



சிங்கள ராணுவம்
சீறிய வேகத்தில்
செத்து மடிந்ததை
நாம் பாட !

பொங்கும் கடலலை
தன்னில் வீழ்ந்தவர்
இன்னுயிர் தந்ததை
நாம் பாட !

கற்றுத் தெளிந்தவர்
வாழ்வினை தமிழரின்
வாழ்வுக்கு தந்ததை
நாம் பாட !

கூறுபடா தொரு
ஈழத் தமிழகம்
குவலயம் போற்றிட
வந்திடுமோ !

எங்களின் தாயகம்
எங்களின் தாயகம்
ஈழத் தமிழகம்
என்போமே !



www.padippakam.com


# சேகரம் ஸ்ரோஸ்

எல்லாப் பொருட்களும்
எழிதாய்க் கிடைக்கும் !
நல்ல மரக்கறி
நயமாய் கிடைக்கும் !
இல்லம் செழிக்க
இனிதாய்க் கிடைக்கும் !
சொல்லப் போனால்
சேகரம் ஸ்ரோஸ் !
தரத்தில் சிறந்த
உடு புடவைக்கும் !
தாயகம் கண்ட
கடல்மீன் வகைக்கும் !
எங்கள் தாயக
பலசரக்குக்கும் !
விரும்பிச் செல்வீர்
சேகரம் ஸ்ரோஸ் !

**SEKARAM STORES**
**Adelgade 46 , 9500 Hobro**
**Tlf : 98 52 49 07 & 98 52 54 58**




படிப்பகம்

www.padippakam.com

# பாட்டாளி

பாடு பட்டு
  இரத்தம் சிந்தும்
பாட்டாளி
  கொடும் சிறையில்
வாடும் நாளும் ।

ஏடெடுத்து
  ஒரு புலவன்
விடுதலை நாள்
  கொண்டுவரத்
தீட்டும்பாவும் ।

நாடமைக்க
  ஒரு தமிழன்
தன்உயிரைப்
  போக்கிடவே
துணியும் நாளும் ।

வாடுகின்ற
  தமிழுக்கோர்
தனிவாழ்வு
  தருகின்ற
பொன்னாள் கண்டீர் ।





படிப்பகம்

# காதலும் வீரமும்

வெஞ்சமரில்
   விஞ்சு புகழ்
கொண்டான்
   காளை !
வேங்கை நிகர்
   கொண்ட தமிழ்
வேந்தர்
   நாட்டில் !
பஞ்சணையில்
   பால் முகத்துப்
பாவை
   நாளை !
பார்த்த படி
   படுத்திருப்பாள்
தமிழ்ப்
   பூங்கோதை !
கொஞ்சு மெழில்
   கொவ்வை இதழ்
வாயில்
   முத்தம் !



கோமகனார்
   வைத்த தொரு
தமிழில்
   நாட்டம் !
அஞ்சுவது
   விளையாட்டின்
வினையே
   என்றான் !
அடலேறு
   போல்
எழுந்து
   அணைத்தான் ஆவன் !
சிந்துதிரச்
   செங்கண்ணாள்
முன்னால்
   நின்று !
சிந்தனையின்
   குளிர் நிலவே
பனி மலரே
   என்றாள் !

www.padippakam.com

சந்தையிலே
   வாங்குகின்ற
சரக்கா
   வீரம் !
சமரசத்துப்
   புது மலரில்
மலர்ந்த
   தென்றல் !
பைந்தமிழில்
   பாவையுன்னைக்
காணாப்
   பாடல் !
பாட்டல்ல
   பைந்தமிழர்
ஏட்டுக்கு
   என்றான் !





படிப்பகம்

www.padippakam.com

# கனவு

விறல் மிகு
   தமிழர் வாழ்வின்
விடியலை
   எண்ணிப் பார்க்கும் !
திறமில்லை
   எனினும் எந்தன்
திராவிட உணர்வால்
   கொஞ்சம் !
அறிவுடன் சற்றுநேரம்
   அதனையே
சிந்தித்தேன் நான் !
   அறியாமை
இருள் அகன்று
   அருந்தமிழ்
ஒளிரக் கண்டேன் !
   கண் அயாராதிருக்கும்
கன்னியர்
   களம் புகுந்து
துன்பமே வாழ்வென்
   றென்னி துயர்படும்
நாளில்
   இன்று !



படிப்பகம்

இன்பமாய் நாங்கள்
வாழும் இழிநிலை
தொடரக் கண்டேன் !
கயவர்கள்
எங்கள்
நாட்டை
களப்பலி
யாகக்
கண்டார் !
உயர்
தமிழ்
மொழியை
மாற்றி
உவகையால்
பூரிக்கின்றார் !
துயரமே
எங்கள்
வாழ்வா
துன்பமே
தொடரும்
நாளா !





படிப்பகம்

www.padippakam.com

அயர்ந்திட
முடியாக்
கொள்கை !
அமைதியாய்
மலரக்
கண்டேன் !
என்தமிழ்
ஈழ
நாட்டில் !
ஏறிய
கொடியைக்
கண்டேன் !
துன்பமும்
மறையக்
கண்டேன் !
துயரமும்
அகலக்
கண்டேன் !
இன்பமாய்
தமிழர்
வாழ்வு
இனிதுற
மலரக்
கண்டேன் !



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் ஈழம்

இலங்கையின்
மலைகள்
தோறும்
இனித்திடும்
தமிழ்
கேட்டாயா !

துலங்கிடும்
ஆற்றில்
எல்லாம்
தேன்தமிழ்
கேட்கின்றாயா !

இலங்கையின்
கடலில்
எல்லாம்
இறைஞ்சிடும்
மொழி
கேட்டாயா !





படிப்பகம்

கலங்கிடும்
கண்ணீர்
வெள்ளம்
கரைவதைப்
பார்க்கின்றாயா !

வீழ்ந்தது
சாதிச்சண்டை
வீழ்ந்தது
வகுப்பு
வாதம் !

தாழ்ந்தது
குலத்தின்
சண்டை
தளர்ந்தது
மதத்தின்
போக்கு !





படிப்பகம்

www.padippakam.com

சூழ்ந்தது
தமிழர்
சேனை
சுதந்திர
வெற்றி
நோக்கி !

அலை
கடல்
போலக்
கூட்டம்
ஆர்ப்பரித்
துவகை
பூத்தார் !

பல லட்சம்
தமிழர்
மீண்டும்
பகமையை
விட்டே
வந்தார் !



படிப்பகம்

சிலலட்சம்
தமிழர்
சேனை
ஓரணி
வகுப்பில்
நின்றார் !

கலைமகள்
கடைக்கண்
வைத்தாள்
கவிஞர்கள்
வாழ்த்துச்
சொன்னார் !

விலையற்ற
தமிழர்
ஈழம்
விடியலைப்
படைத்த
மாதோ !



# SRI AMBALL & CO

டென்மார்க் வாழ் தமிழ் மக்களுக்கு
ஓர் நற் செய்தி
உங்களுக்குத் தேவையான சகல விதமான
புடவைகளும்,பல சரக்குச் சாமான்களும்
மற்றும் பன்சிக்குட் சாமான்களை மிகவும்
மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி

**SRI AMBALL & CO**
**Gothersgade 30 - 7000 Fredericia - Danmark.**
**Tlf : 75 91 42 22**

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆

# NØRDBORG DØGNKIOSK

வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற் செய்தி
இலங்கை இந்திய மளிகைப் பொருட்கள்
மரக்கறி மீன் வகைகள்
ஓடியோ கசற் கொம்பாக்ற் டிஸ்க்குகள்
அனைத்தும் மலிவு வீலையில் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**NØRDBORG DØGNKIOSK**
**- EKSOTIKA -**
**Monradsgade 19 , 7400 Herning.**
**E . Manoharan Tlf / T . fax : 97 21 28 55**

நம்பிக்கையோடு வாருங்கள் !
நிறைவோடு திரும்புங்கள் !!

www.padippakam.com



## கவிஞரைப் பற்றி

கல்வி கற்கும் மாணவனாக இருந்த காலத்திலேயே பரவலாக தமிழ் இலக்கிய உலகிலும் அரசியலிலும் அறியப்பட்ட அருணின் சொந்தப் பெயர் சின்னத்துரை சிவஞானம் தமிழ் மொழி ஆர்வலரான இவர், காளமேகம் என்ற புனை பெயரிலும் இடை இடையே எழுதுபவர்.

கவிதை சிறுகதை கட்டுரை விமர்சனக்குறிப்புகள் என்று பல்வேறு விசயங்களில் கால் பதித்துள்ள அருண் 1970 - ஆம் ஆண்டில் வெளிவந்த அரும்பு என்ற சஞ்சிகையின் ஆசிரியருமாவார். இச்சஞ்சிகை இரண்டு ஆண்டுகள் டென்மார்க்கிலும் வெளிவந்தது. என்பதை டென்மார்க் தமிழர்கள் நன்கு அறிவர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவராகிய இவரது படைப்புகள் இலங்கை இந்திய பத்திரிகைகளில் பிரசுரமாகிப் பலரது பாராட்டையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவர் எழுதிய "தணலில்நின்று" என்ற இக்கவிதை நூலைப் படித்துப் பாருங்கள் பயனைப் பெறுங்கள்.

இரா . செல்வநாதன்,
டென்மார்க்.

நவமணி அச்சகம் டென்மார்க்
Tlf : 40 52 51 68

படிப்பகம்